__மழை நீரை சேமிப்பீர்__

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5.

...

__ந.க.எண்.29006/2002/எல்3.__ __நாள்: 22.4.2002__

__சுற்றறிக்கை__

பொருள்: கடிதப் போக்குவரத்து-நகர்மன்றத் தலைவர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்களிடையே கடிதப் போக்குவரத்து-புகார்-தொடர்பாக.

...

அரசிடமிருந்தோ, அல்லது துறைத் தலைவரிடமிருந்தோ பெறப்படுகின்ற அறிவுரைகள் தங்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படாமல் உள்ளதால் தங்களால் சிறப்பாக பணியாற்ற முடியவில்லையென்று நகர்மன்ற தலைவர்களிடமிருந்து புகார்கள் பெறப்படுகின்றன.

2. இது விஷயமாக நகராட்சிகள் நடைமுறை நூல் பகுதி-பாகம்-2, ஆர்ட்டிக்கிள்கள் 112 மற்றும் 115 தங்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.

3. மேற்படி நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ளவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறைத் தலைவர்களுக்கு நகராட்சி ஆணையரால் எழுதப்படும் கடிதங்கள் நகர்மன்ற தலைவர் மூலமாகத்தான் அனுப்பப்படவேண்டும். இந்த பொதுவான நடைமுறை, சட்டம், ஒழுங்கு போன்ற நிகழ்வுகளில் கால தாமதம் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையில் மட்டுமே தவிர்க்கப்படலாம். மற்ற இனங்களில் நகர்மன்றத் தலைவர் மூலமாகவே கடித போக்குவரத்து மேற்கொள்ளப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

4. மேலும் நகர்மன்ற தலைவர் பெயரில் பெறப்படுகின்ற கடிதங்கள் தவிர நகராட்சி ஆணையரால் பெறப்படுகின்ற முக்கியமான கடிதங்களை நகர்மன்றத் தலைவர் பார்வைக்கு அனுப்பப்படவேண்டும்.

5. இச்சுற்றறிக்கைப் பெற்றுக் கொண்டமைக்கு ஏற்பளிப்பினை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- வி.கு.ஜெயக்கொடி,
நகராட்சி நிர்வாக ஆணையர்.

பெறுநர்

அனைத்து நகர்மன்றத் தலைவர்கள்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

__நகல்:-__
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.33/3315/2002/அ1 நாள்: 5.2002

நகல் அனுப்பலானது.
அ1, அ2, கு1, எப்1, ஜெ1
நகல்: கி1 ஜனா கோப்புக்கு

ஆணையர்
திருத்துறைப்பூண்டி நகராட்சி.